# இலங்கைத் தமிழர் — இந்திய வம்சாவளித் தமிழர் இடையிலான உறவுகள் பற்றிய சில கருத்துக்கள்

ச. சத்தியசீலன்

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் முக்கிய இரு பிரிவினரான இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளித் தமிழர் இடையிலான உறவுகள் பற்றிச் சிறப்பாக இந்தியாவிலும் பிறநாடுகளிலும் தெளிவான கருத்துக்கள் காணப்படாதுள்ளன. இத்தீவின் இருபெரும் சிங்கள, தமிழ் சமூகங்களுக்கிடையிலான மோதல்கள் இனப்பிரச்சினை என்ற வடிவத்தில் கூர்மையடைந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கும் இச்சூழ்நிலையில் தமிழ்பேசும் மக்களின் முக்கிய இரு பிரிவுகளிடையே காணப்படும் உறவுகளை ஆராய்ந்து விளக்கமளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வுறவுகள் பற்றிய ஆய்வில் இலங்கைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதான கட்சியாகிய தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளும், இந்திய வம்சாவளித் தமிழரின் பிரதான அமைப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் செயற்பாடுகளும் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன. இலங்கை சுதந்திரமடைந்த வருடமாகிய 1948இலிருந்து 1977 பொதுத் தேர்தல்வரையுள்ள காலப்பகுதி இவ்வுறவுகள்பற்றிய ஆய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1977இன் பின்பான காலப்பகுதி இவ்வுறவுகளில் இன்னொரு பரிணாமத்தைக் காட்டி நிற்பதால் தனியாக நோக்குதற்குரியது. இவ்விரு பிரிவினரும் இனம், மதம், மொழி, பண்பாடு, கலாச்சாரம், வரலாறு இவைகளினால் ஒற்றுமைப்பட்டிருந்தாலும் புவியியல் அமைவிடம், தொழில் முறைகள், பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகள் தத்தம் தனித்துவமான கலாசாரப் பண்புகள் அரசியல் நடவடிக்கைகள், கல்வி நிலை போன்ற துறைகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றனர்.

பல நூற்றாண்டுகளாக இலங்கையில் தொடர்ச்சியாக வாழ்ந்து வருபவர்களின் குடியினராக இலங்கைத் தமிழரைக் குறிப்பிடலாம். இலங்கைவாழ் சிங்கள மக்களைப் போலவே இவர்களும் இந்நாட்டின் சுதேசக் குடியினராகக் காணப்படுபவர். இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருபவர்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்க தொகையினர் இலங்கையின் ஏனைய பாகங்களில் தம்பொருளாதார நடவடிக்கைகளின் நிமித்தம் வாழ்ந்துவருகின்றனர். ஒப்பீட்டடிப்படையில் அவர்களது சமூக, பொருளாதார அபிவிருத்திகள் இந்திய வம்சாவளித் தமிழர்களது அபிவிருத்திகளிலும் மேம்பட்டவையாகவே இருந்துள்ளன.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளித் தமிழர் அல்லது மலையகத் தமிழர் இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் வளர்ச்சியடைந்த பிரதே

சங்களான மத்திய, சப்பிரகமுவ, ஊவா மாகாணங்களை உள்ளடக்கிய மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் பெருமளவினராகப், பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களாக வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் வருகை இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பித்த காலமாகிய பத்தொன்பதாம் நூற்றுண்டில் முதற்காலிலிருந்து படிப்படியாக அதிகரித்து இருபதாம் நூற்றுண்டின் மூன்றும் தசாப்தம் வரையுள்ள காலப்பகுதிகளில் இடம்பெற்றது. இக்குடிபெயர்வானது குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாக இலங்கையின் உற்பத்திகளுக்கு உலகச் சந்தைகளில் காணப்பட்ட விலைகளின் ஏற்ற இறக்கங்களில் தங்கியதாகக் காணப்பட்டது. இவ்வாறு குடியேறியவர் பாரம்பரிய கண்டிய சிங்களப் பிரதேசங்களில் தம் இன, மொழி, மத, கலாச்சாரங்களுக்கு மாறுபட்ட சூழலில் தனிமைப்பட்ட வகையில் பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களாக வாழ்ந்தனர். இந்திய வம்சாவளித் தமிழர்களிடையேயும் குறிப்பிடத்தக்கோர் தம் பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக இலங்கையின் தலைநகரான கொழும்பிலும், மற்றும் பிரதான நகரங்களிலும் பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இலங்கைத் தமிழர்களிடையே காணப்படுவதைப் போன்ற பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சாதிப் பாகுபாடுகள் வம்சாவளித் தமிழரிடையேயும் காணப்பட்டன.

இந்திய வம்சாவளித் தமிழருக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுவதற்குப் புவியியல் அடிப்படையில் இவர்கள் முன்னவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தமை பெருந் தடையாக அமைந்தது. இவர்கள் வாழ்ந்த புவியியல் பிரதேசம் காரணமாக ஏற்பட்ட தனிப்படுத்தப்பட்ட நிலை, தென்னிந்தியாவில் அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களின் சமூக, கலாசாரப் பண்புகளையே இலங்கையின் மத்திய மலைப் பகுதிகளிலும் பேணிப் பாதுகாக்க வழிகோலியது. தொழில் முயற்சிகள், பொருளாதார நடவடிக்கைகள், இருபிரிவினரிடையேயும் வேறுபட்டிருந்தன. வம்சாவளித் தமிழர் தேயிலை, றப்பர் பெருந்தோட்டங்களிலே தொழிலாளர்களாக வேலை செய்தனர். இலங்கைத் தமிழர் விவசாயம், மீன்பிடித் தொழில், அரசாங்க சேவை, வர்த்தக நடவடிக்கையில் பெருமளவு ஈடுபட்டிருந்தனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த இலங்கைத் தமிழர் மலையகத்தில் வாழ்ந்த தமிழர்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்புக்கள் இல்லாதிருந்தன. இந்த அம்சங்கள் இவ்விரு தமிழ்பேசும் மக்களுக்கிடையிலான உறவுகளில் நெருங்கிய வகையில் இணைப்பை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருந்தன. இவர்களது பொருளாதார சமூக நிலையும் இவ்வுறவுகள் பலப்படுவதற்கு ஏதுவாக அமைந்திருக்கவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டாகிய 1948 இலிருந்து 1977 வரையுள்ள காலப்பகுதியில் இவ்விரு தமிழ்பேசும் மக்களையும் பாதித்த விடயங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1948, 1949களில் கொண்டுவரப்பட்ட இலங்கை – இந்தியர் குடியுரிமைச் சட்டங்கள், 1949 பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம், 1956இல் தனிச் சிங்களச் சட்டம், ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், 1961இல் சத்தியாக்கிரகப் போராட்டம், 1964 ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம். 1972இல்

புதிய அரசியலமைப்புச் சட்டம், 1972, 75இன் காணிச் சீர்திருத்த உச்ச வரம்புச் சட்டங்கள்.

மேற்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள் பொறுத்து இவ்விரு சமூகப் பிரிவுகளும் எவ்வாறு நடந்து கொண்டன என்பதை அறிவதன்மூலம் இவ்விரு பிரிவினரிடையிலான உறவுகளை விளங்கிக்கொள்ள முடியும்.

இலங்கை புதிய அரசாகப் பரிணமித்த ஆரம்ப காலத்திலே அதன் அரசாங்கம் செய்த மிகப் பிரதான நடவடிக்கை இதுவரையும் இலங்கையின் குடிமக்களாக விளங்கிய இந்திய வம்சாவளித் தமிழரது குடியுரிமைகளைப் பறித்தமையே. 1936, 1947ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் பல இடதுசாரி வேட்பாளர்கள் இவ்விந்தியத் தமிழரது ஆதரவுடன் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை வலதுசாரிச் சிங்களக் கட்சியினருக்கு இக்கட்டான நிலைமைகளை உருவாக்கியிருந்தது.[1] இப்பின்னணியில் உருவாக்கப்பட்ட 1948இன் இலங்கைக் குடியுரிமைச் சட்டம், 1949இன் இந்திய பாகிஸ்தானிய வதிவாளர் சட்டம், 1949இன் பாராளுமன்றத் தேர்தல் சீர்திருத்தச் சட்டம் இம்மூன்றும் பெருந்தொகையான இந்திய வம்சாவளித் தமிழரது குடியுரிமைகளைப் பறித்தது.[2] இம்மூன்று சட்டங்களும் இலங்கைத் தமிழ் மக்களுள் மூன்றிலொரு பகுதியினரை நாடற்றவர் என்ற நிலைக்குத் தள்ளியது. இவர்களது குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டதால் பாராளுமன்ற அரசியலில் தமிழ் மக்களின் செல்வாக்கையும் இச்சட்டங்கள் குறைத்துவிட்டன. 1947ஆம் ஆண்டிலே வடக்கிற்கான 9 தமிழ்ப் பிரதிநிதிகளும், கிழக்கிற்கான 7 தமிழ், முஸ்லீம் பிரதிநிதிகளும், மலையகப் பகுதியிலிருந்து 8 தமிழ்ப் பிரதிநிதிகளுமாக 101 பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிநிதிகள் தொகை 24ஆக இருந்தது. ஆனால் இச்சட்டங்களின் பின்னால் மலையகப் பகுதிகளின் தேர்தல் பதிவேடுகளிலிருந்து பெருந்தொகையானவர் நீக்கப்பட்டதால் இப்பகுதிகளிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் ஒருவரேனும் தெரிவு செய்யப்படாதிருக்க அந்த 8 பிரதிநிதிகளும் சிங்களவராயினர்.[3] இதனால் பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் தொகை 24 இலிருந்து 16ஆகக் குறைக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களுள் ஒரு பிரிவினரான இந்தியத் தொழிலாளர் பொறுத்து இலங்கை அரசு மேற்கொண்ட ஒருதலைப்பட்சமான நடவடிக்கையின்போது இலங்கைத் தமிழர்களும் அவர்கள் தலைவர்களும் நடந்து கொண்ட முறை இங்கு கவனிக்கத்தக்கது. இத்தலைவர்கள் ஒருமித்து இச்சட்டவாக்கங்களுக்கு எதிர்ப்புக் காட்டாதது உண்மையே. இத்தலைவர்களுள் ஒரு பிரிவினர் தாங்கள் சார்ந்திருந்த வர்க்க நலன் அடிப்படையில் செயற்பட மறு பிரிவினர் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படவிருந்த அபாயத்தை உணர்ந்தவர்களாகத் தம் எதிர்ப்பைக் காட்டினர். கட்சி அரசியல் வளர்ச்சி பெறாத இக்கட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி கண்ட பிரதிநிதிகளும், தத்தம் தனிப்பட்ட சுயநலக் காரணங்களுக்காகத் தமிழினத்தின் எதிர்காலம்பற்றி அக்கறை கொள்ளாதவர்களும் இப்பாரபட்சமான சட்டவாக்கங்களை ஆதரித்தனர்.[4] திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் இலங்கைத் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த சில பாராளுமன்றப் பிரதிநிதிகளும் ஆதரித்தபோதிலும், அக்கட்சியிலிருந்து இன்னோர் பிரிவினர்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் இச்சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு தனியாகப் பிரிந்து தமிழரசுக் கட்சியை உருவாக்குவதற்கும் இப்பாரபட்சமான சட்டங்களே காலாக இருந்தன என்பதை மறக்கலாகாது.[5] 1939இல் பண்டித நேரு அவர்கள் இந்திய தேசிய காங்கிரசிற்கு அனுப்பிய செய்தியை இலங்கை அரசின் இச்சட்டவாக்கங்கள் பொறுத்துத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். இச்செய்தியிலே பின்வருமாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

"India is weak today and cannot do much for her children abroad. But she does not forget them and every insult to them is humiliation and sorrow for her. A day will come when her long arm will protect them and her strength will compel Justice to them."[6]

பாராளுமன்ற அரசியலில் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் அரசியல் செல்வாக்கு அற்றிருந்த தமிழ்ப் பிரதிநிதிகளின் எதிர்ப்பிலும்பார்க்க இந்த ஆரம்ப கட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் பலமான எதிர்ப்புத் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் பின்னுல் ஏற்பட்ட பல துன்பியல் நிகழ்வுகளுக்கு இடமில்லாமல் இருந்திருக்கலாம்.

"Now sir if all these 700,000 people will tomorrow get assimilated into the Sinhalese linguistic group, there would be no piece of legislation of this type, and that is one of the reasons why I say it is tantamount to discrimination against one linguistic group."[7]

"Now sir, speaking on behalf of my group, I strongly oppose this bill, firstly because it disqualifies a large number of people who would normally, for all practical purposes be subjects of this country."[8]

இச்சட்டவாக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து பிரிந்துசென்ற திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் போன்ருேரால் 1949இல் தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டது. இதன் ஆரம்ப மகாநாட்டிலே திரு. செல்வநாயகம் அவர்கள் இக்குடியுரிமைச் சட்டங்கள்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இலங்கையின் மத்திய பாகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழுலட்சம் தமிழ்த் தொழிலாளர்களுடைய பிரஜா உரிமையைப் பறிப்பதே இச்சட்டங்களின் உண்மை நோக்கம். இவர்களுள்ளே பெரும்பாலானேர் வேறு நாட்டையே அறியமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் இந்தியர்களல்லர், இலங்கையரே. தமிழ் பேசும் மக்களாக இருப்பதே அவர்களுடைய ஒரேஒரு குற்றமாகும். இந்த மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்குச் சட்டம் இயற்றிவிட்டனர். இது கொடுமையிலும் கொடுமையாகும். அரசாங்கத்தின் நோக்கம் இந்நாட்டில் வசிப்பதற்குப் பூரண உரிமையுடைய இம்மக்களை நாட்டைவிட்டுத் துரத்துவது அல்லது பலவந்தமாகத் துரத்துவது அல்லது அவர்களைப் பலவந்தமாகச் சிங்களம் பேசும் மக்களாக மாற்றுவதுதான் என்பது எவருக்கும் எளிதிற் புலனுகும்."[9]

தொடர்ந்து கட்சியின் அடிப்படைக் கொள்கைபற்றிக் குறிப்பிடுகையில் ''மலைநாட்டில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களுடைய நிலைமையானது இங்கு கூறிய தாழ்த்தப்பட்டோருடைய நிலையிலும்பார்க்கக் கேவலமானதாக இருக்கின்றது. இவர்கள் அரசியலில் தீண்டத்தகாதவர்களாகி விட்டார்கள். அவர்களுக்குப் பிரஜாவுரிமை இல்லாமலிருப்பது மாத்திரமன்றித் தமக்கென ஒரு நாடுமற்ற அகதிகளாகவும் இருக்கின்றனர். ஏனைய தமிழ் பேசும் மக்கள் இவர்களுக்கு வந்திருக்கும் இன்னல்களைத் தங்களுக்கு வந்ததாகவே கருதல்வேண்டும். அவர்கள் உதவிக்கு எதிர்பார்ப்பது இந்தியாவை அல்ல. சுதந்திரம் விரும்பும் இலங்கைவாழ் மக்களிடமிருந்தே அவ்வுதவி வருதல்வேண்டும். இவ்விரண்டு விடயங்களும் நீங்கள் ஆரம்பிக்க வந்திருக்கும் இக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் இடம் பெறுதல் வேண்டும்'' என்றார்.[10] திரு. செல்வநாயகம் அவர்களது கருத்துக்கள் இவ்விரு பிரிவினரிடையிலான உறவுகள் மொழி, இன அடிப்படையில் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தின.

வாக்குரிமை பறிக்கப்பட்டதன் பின்பாக இந்திய வம்சாவளித் தமிழர் அரசியல் நடவடிக்கைகளில் பெருமளவு பங்குபெற முடியாதவர்களாகினர். அவர்கள் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குச் செல்லவேண்டியதாயிற்று; அதன் தலைவர்களும் குடியுரிமை பெறுதல், குறைந்தபட்ச ஊதியம், ஆரம்ப சுகாதார, கல்வி வசதிகளை அதிகரித்தல் போன்ற நலன்களைப் பெறுதற்கான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். இம்மாற்றத்தால் இலங்கைவாழ் இவ்விரு தமிழ் பேசும் மக்களின் நலன்கள் பொறுத்த நடவடிக்கைகளும், நோக்கங்களும் வழிமுறைகளும் வேறுபடலாயின. இப்பின்னணியில்தான் 1956ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம் பொறுத்து இவ்விரு பிரிவினரும் காட்டிய எதிர்ப்பை விளங்கிக்கொள்ள முடியும். இலங்கைத் தமிழர் பொறுத்து இச்சட்டமானது அவர்களது அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் பெரும் இடர்பாட்டினை ஏற்படுத்தியது. கல்வி, வேலைவாய்ப்பு பதவி உயர்வு, அரசாங்கத்துடனான தொடர்புகள், தமிழ் மொழி பொறுத்துக் காட்டப்பட்ட பாரபட்சம் – இத்துறைகள் பொறுத்துத் தனிச் சிங்களச் சட்டம் இலங்கைத் தமிழரை இரண்டாம் தரக் குடிமக்களாக்கியது. வெறுமனே மொழியுடன் இணைந்ததாக அல்லாமல் தமிழ் மக்களுடைய அரசியல், பொருளாதார, சமூக அந்தஸ்துப் பொறுத்துப் பலத்த அடியினை இச்சட்டம் கொடுத்தது. இச்சட்டம் தொடர்பாக இந்திய வம்சாவளித் தமிழர்களது எதிர்ப்பு முன்னவரது எதிர்ப்புப் போன்று பலமானதாகக் காணப்படவில்லை. குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டதனால் நாட்டின் அரசியல் வாழ்விலிருந்து ஒதுக்கப்பட்ட நிலை, கல்வி நிலை, பொதுவாக இவர்களின் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் தனிச் சிங்களச் சட்டத்துக்கு இலங்கைத் தமிழர் காட்டியது போன்ற பலமான எதிர்ப்பைக் காட்ட முடியாது போகக் காரணமாயிற்று. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட ஓர் இனம் சிறுபான்மை இனம். எவ்வளவுதான் எதிர்ப்பை ஒருமித்துக் காட்டினும் தனது நலன் பேணும் வகையிலேயே நடந்துகொள்ளும் என்பதற்கு இலங்கைப் பாராளுமன்றத்திலே தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை தக்க எடுத்துக்காட்டாகும். பெரும்பான்மை இனத்தின் பிரதிநிதிகளைப் பெரும்பான்மை

யாகக் கொண்ட பாராளுமன்றத்தில் அவர்கள் விருப்பங்களுக்கு மாருகச் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகளால் எதிர்ப்பைத் தெரிவிப்பதைத் தவிர வேறெதுவும் செய்யமுடியாது என்பதற்கு இத்தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை சான்ருகின்றது. இந்திய வம்சாவளித் தமிழரோ வாக்குரிமை பறிக்கப்பட்டு அரசியல் களத்திலிருந்து ஒதுக்கப்பட்டனர். இலங்கைத் தமிழரோ வாக்குரிமை இருந்தும் அரசியல் செல்வாக்கு இல்லாதவராயினர்.

தனிச் சிங்களச் சட்டத்திற்குப் பூரண எதிர்ப்பைத் தெரிவித்து சாத்விகமான முறையிலே போராட்டம் ஒன்றைத் தமிழ் மக்கள் ஆரம்பித்தனர். இதன் விளைவாக அப்போதைய பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா அவர்கள் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடன் தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை உட்படப் பல்வேறு உரிமைகளையும் குறிப்பிடத்தக்களவு பேணுகின்ற ஒப்பந்தமொன்றினைச் செய்தார்.[11] ஆனல் இவ்வொப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிங்களப் பேரினவாதிகளினதும் தீவிர எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது. இக்குழப்பமான சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியினரின் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தமிழ்ப் பிரதேசங்களில் சாத்விக சட்ட மறுப்பு ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மறுபுறம் தென்னிலங்கையில் இனவெறிக் கலவரம் வெடித்தது. மலைநாட்டில் சிங்கள இனவெறியர் தமிழ்ச் சொற்களை அழித்ததைத் தமிழ்த் தொழிலாளர் ஆட்சேபித்தனர். இதனைத் தொடர்ந்து பொகவந்தலாவையில் ஏற்பட்ட பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பிரான்சிஸ், ஐயாவு எனுமிரு தமிழ்த் தோட்டத் தொழிலாளர் கொல்லப்பட்டனர். தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளின் பேரில் வடக்குக் கிழக்கு மாகாணமெங்கும் இவ்விருவரும் தியாகிகளாகக் கொள்ளப்பட்டு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பூரண ஹர்த்தால் 5-4-1958இல் அனுஷ்டிக்கப்பட்டது.[12] இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளித் தமிழர் உறவுகள் பொறுத்து இச்சம்பவம் பெரிதும் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்குரியது.

1960 யூன் தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 1961இல் மீண்டும் தமிழ் மக்கள் மொழியுரிமையைப் பாதிக்கும் நடவடிக்கையிலே ஈடுபட்டது. முற்றிலும் தமிழ் பேசும் பிரதேசங்களான வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உட்படச் சகலதரத்து நீதிமன்றங்களிலும் சிங்களத்தைத் திணிக்கும் 1961இன் நீதிமன்ற மொழிச் சட்டத்தை உருவாக்கியது.[13] இதனைத் தொடர்ந்து இலங்கைவாழ் தமிழ் மக்களுடைய பல்வேறு உரிமைகளைக் கோரித் தமிழரசுக் கட்சியின் தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம் 1961 ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மார்ச் வரை இடம்பெற்ற இவ் அகிம்சைவழிப் போராட்டமானது இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றிலே மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொண்டது. இப்போராட்டத்திலே இந்திய வம்சாவளித் தமிழர்களது ஆதரவும் ஈடுபாடும் தமிழர் என்ற ஒருமித்த இன உணர்வும் இவ்விரு பிரிவினரிடையே காணப்பட்ட உறவுகள் பொறுத்து முக்கியத்துவம்

பெறுகின்றன. போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. சௌ. தொண்டமான் சத்தியாக்கிரகம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று மக்களுக்கும், தலைவர்களுக்கும் உற்சாகமூட்டினர். வவுனியா, மன்னர் பகுதிகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் இப்போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றினர். தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுச் சத்தியாக்கிரகம் இராணுவத்தால் முறியடிக்கப்பட்டபோது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி தி. நடேசபிள்ளையும் கைதுசெய்யப்பட்டார். இக்கட்டத்திலே மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களும் போராட்டத்தில் குதிக்கத் தயாராகினர். ஏப்ரல் 24ஆம் திகதி தோட்டத் தொழிலை அத்தியாவசிய சேவையாக்கும் சட்ட விதிகளை அரசாங்கம் பிரகடனஞ் செய்த போதிலும் ஏப்ரல் 25ஆம் திகதி மலைநாட்டுத் தோட்டங்களில் ஐந்துலட்சம் தமிழ்த் தொழிலாளர் பரிபூரண வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர்.[14] அன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி அரசுக்குச் சமர்ப்பித்த அதே கோரிக்கைகள் அடங்கிய நாலு அம்சக் கோரிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்தது. தொடர்ந்து தோட்டப் பிரிவுகளுக்கும் இராணுவப் பிரிவுகள் அனுப்பப்பட்டன. தமிழர் உரிமைகளை வென்றெடுப்பதில் தமிழினத்தின் ஒற்றுமை உலகம் முழுவதற்கும் தெளிவாகக் காட்டப்பெற்றது.[15]

சத்தியாக்கிரகப் போராட்டத்தை அடுத்து வளர்ச்சியுற்ற தமிழ்த் தேசிய விழிப்புணர்ச்சியினைத் தொடர்ந்து இந்திய வம்சாவளித் தமிழரையும் இலங்கைத் தமிழரையும் ஒருங்கிணைத்துச் செல்லும் விருப்பு தமிழரசுக் கட்சியின் மன்னர் மகாநாட்டில் பிரதிபலித்தது. மன்னர் மகாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க மலைநாட்டுத் தமிழ் மக்களை வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களோடு ஸ்தாபன ரீதியாக ஒன்றிணைப்பதற்கு ஒரே வழி கட்சியின் தலைமையில் மலைநாட்டில் ஒரு தொழிற்சங்கத்தை நிறுவுவதே என்ற முடிவுக்குக் கட்சி வந்தது.[16] இதன் விளைவாக 22-12-1962 இல் ஹட்டன் நகரில் இலங்கைத் தொழிலாளர் கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மலைநாட்டில் பல கிளைகளும் அமைக்கப்பட்டன. இதன் தலைவராக டாக்டர் நாகநாதனும், செயலாளராக திரு. சிவானந்தசுந்தரமும் விளங்கினர். இக்கழகம் தொழில் தகராறுகளை நீதிமன்றங்களுக்கும் தொழில் நீதிமன்றங்களுக்கும் எடுத்துச் சென்று வாதாடியது. பலம் வாய்ந்த தொழிற்சங்கங்களோடு போட்டி போடுவதில் புதிய தொழிற்சங்கம் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

1948இன் பின்பாக இயற்றப்பட்ட சட்டங்களைத் தொடர்ந்து குடியுரிமையிழந்து நாடற்றவர்களாக்கப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்படும் நோக்குடன் உருவாக்கப்பட்டதே 1964ஆம் ஆண்டின் ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தமானது இரு நாடுகளினாலும் அங்கீகரிக்கப்படாத 'நாடற்றவர்' எனக் கருதப்படும் நிலையை முடித்து ஒன்றில் இலங்கை அல்லது இந்தியக் குடிமக்களாக்கப்பட வேண்டும் என்பதனையே உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இந்தியப் பிரதமர் ஜவஹர்

லால் நேருவுடன் இலங்கை அரசு நடாத்திய பேச்சுவார்த்தைகளின்போது இலங்கைவாழ் இந்தியத் தமிழரின் எதிர்காலம் இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்றும், அவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதைத் துரிதப் படுத்துமாறும் கேட்கப்பட்டது. ஆனல் நேரு மறைந்து லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் பதவியைப் பெற்றமையும், 1962இன் சீன - இந்தியப் போரினைத் தொடர்ந்து தென்னுசியாவில் இராஜதந்திர ரீதியில் இந்தியா தனிமைப்படுத்தப்பட்டமையும் இப்பிரச்சினை பொறுத்து இதுவரை கடைப் பிடிக்கப்பட்டு வந்த கொள்கையிலே மாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது கொடுத்து எடுக்கும் (Give and take) அடிப்படையில் இப்பிரச்சினை யைத் தீர்க்க இந்திய அரசு விரும்பியது.[17] இப்பின்னணியில் இந்திய வம்சாவளித் தமிழரின் நலன்கள் முற்ருகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தை இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு இந்திய அரசும் இலங்கை அரசும் சேர்ந்து இழைத்த மாபெரும் துரோகம் எனலாம். இதனையே பேராசிரியர் சூரிய நாராயண் பின்வருமாறு குறிப்பிடுகிருர்.

"It is the tragedy of India - SriLanka relations that this agreement, which had a bearing on the lives of thousands of people of Indian origin, was finalised by the two governments without taking into consideration the feelings and views of the plantation workers.[18]

இவ்வொப்பந்தத்திற்கு எல்லாத் தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்தன. இலங்கைத் தமிழரின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியும் அதன் அங்கமான இலங்கைத் தொழிலாளர் கழகமும் தீவிர எதிர்ப்பைக் காட்டியதன்மூலம் தோட்டத் தொழிலாளரிடையே குறிப்பிடத்தக்களவு செல்வாக்கைப் பெற்றுக்கொண்டன,

1965இல் தேசிய அரசாங்கமொன்றைத் தமிழரசுக் கட்சியின் உதவி யுடன் அமைத்த டட்லி சேனநாயக்கா ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுலாக்க முற்பட்டார். இது மலைநாட்டுத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் சிலவற்றுக்கே மாருகக் காணப்பட்டது. இதனுல் பிரதமர் அதனை அமுல்நடத்த முயன்றபோது தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பு ஏற்பட்டது. இதனுல் விருப்பத்துக்கு மாருக யாரையும் இந்தியப் பிரஜையாகப் பதிவுசெய்யும் வற்புறுத்தல் இல்லா தொழியும் எனவும், இந்தியா திரும்புவோரின் வீதத்திற்கே இலங்கைப் பிரஜைகளைப் பதிவுசெய்யும் திட்டமும், இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்தோரைத் தனி இடாப்பில் வைத்திருக்கும் நிலையும் போன்ற அம் சங்கள் நீக்கப்பட்ட ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தமே தேசிய அரசாங்கத் தினுல் அமுல்நடத்தப்பட்டது.[19] அதாவது தமிழரசுக் கட்சி கட்டாய நாடுகடத்தலோ, தனிப்பட்ட தேர்தல் தொகுதியோ அமுல்நடத்தப்பட மாட்டாது என்பதை ஏற்றுக்கொண்டு இவ்வொப்பந்தத்தினை ஆதரித்தது. கட்சி இதனை ஆதரித்தபோதும் அதில் உடன்பாடு காணுத மேற்சபை உறுப்பினர் திரு. எம். மாணிக்கம் இச்சபையிலிருந்து இராஜினுமாச் செய்தார்.

இலங்கைத் தமிழ் தலைமைத்துவத்தின் அரசியல் யுக்தியில் இந்திய வம்சாவளித் தமிழருடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துவது பிரதான இடத்தை வகித்தது.[19] பாரம்பரியத் தாயகப் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் குடித்தொகை பொறுத்து இலங்கைத் தமிழர் தொகை போதுமானதாகக் காணப்படாத நிலைமை அவர்களது பிரச்சினைகளில் ஒன்றாக இருந்தது. இதன் விளைவாகப் பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழ்ந்த இந்திய வம்சாவளித் தமிழர் இவ்விரு மாகாணங்களின் எல்லைப் பிரதேசங்களில் குறிப்பாக வட மாகாணத்தில் குடியிருப்புக்களை ஏற்படுத்துவதற்கு ஊக்கம் கொடுக்கப்பட்டது. 1965, மார்ச்சில் செய்துகொள்ளப்பட்ட டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் தமிழ்த் தாயக மாகாணங்களில் நிலக் குடியேற்றத் திட்டங்கள் பொறுத்து மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததைக் காணலாம். அதாவது அவ்விரு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் நிலக் குடியேற்றத் திட்டங்கள் பொறுத்து முதலில் இம்மாகாணங்களில் வாழும் மக்களுக்கும் அடுத்து இலங்கையின் ஏனைய பாகங்களில் வாழும் தமிழர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருந்தது.[20] வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட நிலங்களில் இந்திய வம்சாவளித் தமிழரைக் குடியமர்த்தும் நோக்குடன் இவ்வொழுங்குபாடுகள் வரையறுக்கப்பட்டிருந்தன.

1949ஆம் ஆண்டிலிருந்தே சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி) இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை விவகாரங்களைத் தனது அரசியல் நடவடிக்கைகளின் முக்கிய அம்சமாகக் கொண்டிருந்தது. அதனுடைய வருடாந்த மகாநாட்டுத் தீர்மானங்களிலும், தேர்தல் அறிக்கைகளிலும் செய்துகொண்ட ஒப்பந்தங்களிலும்,இந்தியவம்சாவளித் தமிழர் பிரச்சினைகள் ஆராயப்பட்டிருப்பதையும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும், தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்கலாம். சொலமன் பண்டாரநாயக்கா (1956-59), ஸ்ரீமா பண்டாரநாயக்கா (1960 -65) காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் இரு பிரதான இந்திய தமிழ் அமைப்புகளான பலம் வாய்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினதும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவைப் பெருமுயற்சிசெய்து பெற்றதை இப்பின்னணியில் விளங்கிக் கொள்ளலாம். 1970ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூட இந்திய வம்சாவளித் தமிழர் நிலைபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''இன்னும் அந்தஸ்து நிர்ணயிக்கப்படாமல் இடைநடுவில் ஊசலாடும் இலட்சக்கணக்கான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நிலைமைக்கு முற்றுப் புள்ளி காணத் துரித நடவடிக்கை எடுத்தல், அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக வேண்டும், அரசு தார்மீக, சட்டபூர்வக் கடப்பாடுகளுக்கமைய இலங்கையையே தம் நிரந்தரத் தாயகமாக்க விரும்பும் அத்தனை பேரையும் நாட்டின் பிரஜைகளாக ஏற்கவேண்டும்.''[21]

சிங்கள ஆதரவு அரசாங்கங்களுக் கெதிராகப் பரந்தளவிலான இந்திய வம்சாவளி, இலங்கைத் தமிழர் பங்குபற்றும் அகிம்சைப் போராட்டத்தை

முன்னெடுத்து இலங்கையில் காணப்படும் தமிழரின் பிரச்சினைகளை இந்திய அரசுக்கு வெளிப்படுத்தி அதன்மூலம் ஒரு தீர்வு காண்பதாக இக்கட்சியின் அரசியல் யுக்திகள், நடவடிக்கைகள் அமைந்திருந்தன எனலாம், இவ்வகையில் இலங்கைத் தமிழர் தலைமை தமிழர் பொதுநலன் கருதி இந்திய வம்சாவளித் தமிழரையும் அரவணைத்துச் செல்லும் கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருப்பதை அவதானிக்கலாம். ஆனால் இரு பிரிவு மக்களுடைய பிரச்சினைகளும். தொழில் முறைகளும், நடவடிக்கைகளும், இருப்பிடங்களும் வெவ்வேறாகக் காணப்பட்டதனால் வலிமை வாய்ந்த இணைப்பை அரசியலரங்கில் இவர்களிடையே ஏற்படுத்த முடியாமல் போயிற்று.

1970 - 77 இடையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கத்தில் இவ்விரு தமிழ்ப் பிரிவினருடைய நலன்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டன. இலங்கைத் தமிழர் பொறுத்துத் தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை, அரசாங்க, தனியார் துறை வேலைவாய்ப்புகளில் புறக்கணிப்பு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவலான அடக்குமுறை மேற்கொள்ளப்பட்டமை, 1972இன் புதிய அரசியலமைப்பில் சோல்பரி அரசியல் திட்டம் வழங்கிய சிறுபான்மையோர் காப்பீடுகள், மொழியுரிமை உட்படப் புறக்கணிக்கப்பட்டமை ஆகிய நடவடிக்கைகள் காரணமாகப் பரவலான அதிருப்தியும், அரசாங்கத்திற்கெதிரான வெறுப்புணர்வும், தொடர்ந்தும் ஐக்கிய இலங்கையில் வாழ முடியுமா? என்ற சந்தேகங்களும் ஏற்படலாயின. மலையகத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகள், தோட்டங்களைத் தேசிய மயமாக்கல், 1972இல் காணிச் சீர்திருத்தச் சட்டம், 1975இல் காணிச் உச்சவரம்புச் சட்டம், ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தத்தைக் கடுமையாக அமுலாக்கல் மூலம் மேற்கொள்ளப்பட்டன.[22] 1972இல் நிறைவேற்றப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் சுமார் 80,000 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கல் என்ற போர்வையில் 'சிங்கள மயமாக்கப்பட்டன', தேசிய மயமாக்கப்பட்ட தோட்டங்களிலிருந்து தமிழ்த் தோட்டத் தொழிலாளர் அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழிக்கு மாறாக அவர்கள் இத்தோட்டங்களிலிருந்து விரட்டப்பட்டுத் தோட்டத் தொழிலோடு தொடர்புறாத சிங்கள கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. 1975இன் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ்த் தோட்ட உரிமையாளர்களுக்கு 50 ஏக்கர் தேயிலை அல்லது றப்பர் தோட்டங்கள் வழங்கப்பட்டு ஏனையவை சுவீகரிக்கப்பட்டன. இக்காலப் பகுதியிலேதான் மலையகத் தமிழருக்கெதிராக இனத்துவேஷம் கடுமையாகக் காட்டப்பட்டது. 1973 - 75 காலப்பகுதியில் நாட்டிலே ஏற்பட்டிருந்த வறுமை இந்திய வம்சாவளித் தமிழர் நிலைமையை மேலும் மோசமாக்கியது. இந்நிலைமையைப் பேராசிரியர் சி. ஆர். டி. சில்வா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

Although a resurgence of anti - Tamil feeling among the Kandyan Sinhalese in the difficult days of 1974 – 75 led to harassment, eviction and occasionally even starvation and death of some groups of Indian Tamils, and also they were conistsently discriminated against in the distribution of land under the land reform laws in the 1970s and violently attacked in many areas by Sinhalese in August 1977.[23]

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அரசாங்கம் இவ்விரு தமிழ்ப்பிரிவினர் மீதும் கட்டவிழ்த்த அடக்குமுறைக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படும் தேவை இவ்விரு பகுதியினரின் அரசியல் தலைமைத்துவத்துக்கும் அவசியமாயிற்று.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் இவ்விரு தமிழ்ப்பிரிவினருக்குமெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக தமிழரசுக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், தமிழ்க் காங்கிரசும் இதர கட்சிகள் சிலவும் கூட்டாக ஆறம்சக் கோரிக்கையை அரசாங்கத்தின் முன்வைத்தன. அரச கரும மொழியாகச் சிங்களத்துக்கும், தமிழுக்கும் சம அந்தஸ்து, இலங்கையில் வதியும் எல்லோருக்கும் குடியுரிமை வழங்கல், மதச்சார்பற்ற அரசு, எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்து — விஷேட சலுகைகள் வழங்காமை அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சமத்துவம் பொறுத்து அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம், தீண்டாமை ஒழிப்பு, அதிகாரப் பரவலாக்கம் என்பனவாக அமைந்தன.[24] இக்கோரிக்கைகள் ஐக்கிய இலங்கையில் இவ்விரு தமிழ் பேசும் மக்களும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு விரும்பி நின்றதை எடுத்துக்காட்டியது. ஆனால் ஐக்கிய முன்னணி அரசாங்கமோ இக்கோரிக்கைகளை முற்றுகவே நிராகரித்தது. இச்சூழலில்தான் மேற்குறிப்பிட்ட தமிழர் கட்சிகள் ஒன்றிணைந்து 1972இல் தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கின. 1976, மேயில் வட்டுக்கோட்டையில் நடந்த சுமாநாட்டிலே தமிழர் ஐக்கிய முன்னணி, தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியது. திரு. சௌ. தொண்டமான் அவர்களும் தனிநாட்டுக் கோரிக்கை மலையகத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது எனக் குறிப்பிட்டு இக்கூட்டணியில் தீவிரமாகத் தன்னுல் இயங்க முடியாதிருப்பதை உணர்த்தினர். ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் அடக்கு முறைகள், பாரபட்சம் இவற்றிற்கெதிராக ஏற்பட்ட இவ்விரு தமிழ்ப் பிரிவினரதும் ஒற்றுமை 1977இன் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து படிப்படியாகப் பலவீனப்பட்டு ஒரு பிரிவினரைப் பிரதிநிதித்துவம் செய்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களின் நலன் பேணும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டதைத் தொடர்ந்து மேலும் பலமிழந்தது.

இலங்கைத் தமிழர் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் இந்திய வம்சாவளித் தமிழரைச் சமத்துவமாக நோக்குவதில்லை என்ற கருத்து நிலவி வருகின்றது. இவர்கள் வாழும் புவியியல் பிரதேச அடிப்படையில் இரு சமூகப் பிரிவினருக்குமிடையிலான தொடர்புகள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன. எண்ணிக்கை அடிப்படையில் இவ்விரு பிரிவினரும் கலந்து வாழும் சந்தர்ப்பங்களும் மிகக் குறைவாகவே காணப்பட்டன. மலையகத்தில் மிகக் குறைந்த அளவிலான இலங்கைத் தமிழர்களே பெருந்தோட்டத் துறையை ஒட்டிய சில சேவைத் துறைகளிலும், தோட்டப் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் சேவையிலும், சிறு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களது நடவடிக்கைகளை மட்டும் கொண்டு இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளித் தமிழரைச் சமத்துவமாக நோக்குவதில்லை என்ற முடிவுக்கு வருவது பொருத்தமானதல்ல. இது

தொடர்பாக மேலும் சில விபரங்களை இங்கு கொடுக்க முடியும். தமிழ் நாட்டிலிருந்து குறிப்பாகத் திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து பெருந்தோட்டங்களிலே வேலை செய்வதற்கு வந்தவர்களுள் பெரும்பாலானோர் பொருளாதார நிலையிலும், சமூக அந்தஸ்துப் பொறுத்தும் கீழ்மட்டத்தில் உள்ளவர்களாகவே காணப்பட்டனர். இவர்களுள் மிகப் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.[25] இவர்களது மேற்பார்வையாளர்களாகத் தமிழ் நாட்டிலிருந்து வந்த உயர்சாதியினரும் இவர்களைத் தம்முடன் சமத்துவமானவர்களாக நடத்தவில்லை. இந்நிலைமையானது சாதியமைப்பு, பொருளாதார நிலை, கல்வி வாய்ப்புக்கள் பொறுத்ததாகவே அமைந்தது. பழைமை பேணும் பண்பு கொண்ட, சாதியமைப்பை அங்கீகரித்த ஒரு சமூக அமைப்பிலிருந்து தொழிலுக்காக மலையகம் சென்ற இலங்கைத் தமிழரும் தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டனர். இலங்கைத் தமிழரிடையே கூடச் சாதியமைப்பின் காரணமாக எல்லோரையும் சமத்துவமாக நோக்கும் தன்மை காணப்படாதிருந்தது. ஆனல் தமிழ்நாட்டில் தற்போது நிலவிவரும் சாதியமைப்புடன் இலங்கைத் தமிழரிடையே வழங்கிவரும் சாதியமைப்பை ஒப்பிடுமிடத்துப் பின்னது தாராளப் பண்புகள் கொண்டதாக இருப்பதை அறிய முடிகின்றது. தமிழ் நாட்டிலே உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினரை நடத்தும் வகையிலும் எவ்வளவோ மடங்கு சிறப்பான வகையிலே இலங்கைத் தமிழ் உயர் சாதியினரால் இங்குள்ள தாழ்த்தப்பட்டோர் என்று அழைக்கப்படுபவர்கள் நடத்தப்படுகின்றனர்.[26]

இந்திய வம்சாவளித் தமிழர் இலங்கைத் தமிழரிடையே குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் பொறுத்துச் சில முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே ஆட்சியாளர் இவ்விரு தமிழ்ப் பிரிவினரிடையே பிளவினை ஏற்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்தாலும் 1977வரை அவர்களால் அதில் பெருவெற்றி காணமுடியவில்லை எனலாம். வளர்ந்துவந்த சிங்கள, தமிழ் மத்திய வகுப்பினரிடையே பொருளாதார நலன்கள் பொறுத்து முரண்பாடுகள் ஏற்பட்டதை ஒத்ததாகவே இம்முரண்பாடுகளும் காணப்பட்டன. அதாவது மலையகத்தில் தோட்ட நிர்வாகம், பாடசாலைகள், சிறுவர்த்தக நடவடிக்கைகள் பொறுத்து இலங்கைத் தமிழர் பெற்றுக்கொண்ட பதவிகளை இங்கு கல்வி கற்று வளர்ச்சியடைந்த புதிய மத்திய வகுப்பினர் பெற முற்பட்டதன் வெளிப்பாடாகவே இவை அமைந்தன. 1960களின் பின்பாக இம்முரண்பாடுகள் யாழ் எதிர்ப்பு வாதமாக வளர்ச்சி பெற்று, 70களின் பின்னர் தளர்வுற்றதெனலாம். இக்காலப் பகுதியில் இந்திய வம்சாவளித் தமிழரிடையே வளர்ச்சி பெற்ற மிகச் சிறிய மத்திய வகுப்பினரால் பரவலாக எதிர்ப்பு வாதம் முன்வைக்கப்பட்டாலும் இவ்விரு தமிழ்ப் பிரிவினரிடையேயான உறவுகள் பொறுத்துக் குறிப்பிடத்தக்க தாக்கத்தை அது ஏற்படுத்தவில்லை எனலாம். தோட்ட, அரசாங்கப் பாடசாலைகளிலே ஆசிரியர்களாகக் கடமையாற்றிய இலங்கைத் தமிழர் பொறுத்துக் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டாலும், பல ஆசிரியர் தங்கள் தன்னலமற்ற ஆசிரிய சேவையினுல் இன்றும் மலையக மாணவர்களால் நன்றியுணர்வுடன் நினைவு கூரப்படுகிறூர்கள்.[27] தனிமனித குறைபாடுகள் இவ்வெதிர்ப்பு வாதத்திலே முன்வைக்கப்பட்டாலும், மலையகத்தில் தோட்ட, அரசாங்கப் பாடசாலை

களில் இலங்கைத் தமிழாசிரியர் கல்விப்பணி இவர்கள் கல்வி முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியதை மறுப்பதற்கில்லை.

இலங்கைத் தமிழர் இந்திய வம்சாவளித் தமிழர் நலன்களைப் பேணிப் பாதுகாக்கவில்லை என்றும், அவர்களைக் கைவிட்டுவிட்டார்கள் என்றும் பரவலான கருத்துக்கள் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் புத்திஜீவிகள் மத்தியிலே காணப்படுகின்றது.[28] 1948ஆம் ஆண்டிலிருந்து 1977 வரையுள்ள காலப்பகுதியில் இடம்பெற்ற மேற்காட்டப்பட்ட விவரங்களை வைத்துப் பார்க்கையில் எவ்வளவு தூரம் தம்மால் இயன்றளவிற்கு இவ்விரு தமிழ் மக்கள் மீதான எதிர் நடவடிக்கைகளுக்கு முழு எதிர்ப்பையும் காட்டி வந்தனர் என்பதை அறிய முடிகின்றது. ஆனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த சிங்கள ஆட்சியாளரின் பாரபட்சமான, ஒரவஞ்சகமான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் வல்லமை இல்லாதவர்களாக இலங்கைத் தமிழர் காணப்பட்டனர். ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒருமுறை கூறியதுபோல[29] இலங்கை வாழ் தமிழ் மக்களின் நலன்களைப் பாதிக்கின்ற சட்டங்கள் இயற்றப்பட்ட நேரங்களில் இந்திய அரசு தலையிட்டு நீதி தேடிக் கொடுத்திருந்தால் தற்போது காணப்படும் மோசமான நிலையை இத்தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருக்க மாட்டார்கள். இந்திய வம்சாவளித் தமிழரைப் பொறுத்து நேரு அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்த கொள்கையை விட்டு 1964இல் ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டமை இலங்கை வாழ் தமிழர் பொறுத்து அது செய்த மாபெரும் துரோகமாகும். இந்நடவடிக்கை ஏற்கனவே சிறுபான்மையினராகக் காணப்பட்ட தமிழ் மக்கள் எண்ணிக்கையைக் குறைத்ததுடன் பாராளுமன்ற அரசியலிலே அவர்களைப் பலவீனமானதாக்கியும் விட்டது. இந்திய வம்சாவளித் தமிழர் குடியுரிமை, வாக்குரிமை இல்லாது எதனையுமே சாதிக்க முடியாதிருந்தனர். இலங்கைத் தமிழரோ குடியுரிமை, வாக்குரிமை, தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் இருந்தும் எதனையும் சாதிக்க முடியாதவராகினர். சுதந்திர இலங்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் இருவர் நிலையும் ஒன்றாகவே இருந்தது.

## உசாவியவை

1 Wilson, A. J. Politics in Sri Lanka, (London, 1974) p. 29

2 Kodikara, S. U. Indo-Ceylon Relations Since Independence, Ceylon Institute of World Affairs, (Colombo, 1965) p. 79

3 Ceylon Faces Crisis (Colombo, 1957) p. 14

4 Kumari Jayawardena, Ethnic and Class Conflicts in Sri Lanka. Centre for Social Analysis, (Dehiwela, 1985) pp. 55-56

5 Silva, C. R. de "The Sinhalese-Tamil rift in Sri Lanka" in A. Jayaratnam Wilson and Dennis Dalton (eds) The States of South Asia- Problems of National Integration (Honolulu, 1982) p. 161

6 Quoted in Karan Singh, 'The Keynote Address' I. J. Bahadur Singh(ed) The other India (New Delhi, 1979) p. 24

7 Parliamentary Debate (Honsard) 1948, Column 1762

8 Ibid, Column 1767

9 இலங்கைத் தமிழரசுக் கட்சி வெள்ளிவிழா மலர், பகுதி 1 (யாழ்ப்பாணம், 1974) பக். 8, 11

10 மேற்படி பக். 11

11 Kearney, R. N. Communalism and Language in the Politics of Ceylon. Duke University press (Durham No. 1967) pp. 144-46

12 இ. த. அ. க. வெள்ளிவிழா மலர், பகுதி 2, பக். 31

13 காராளசிங்கம், வி. தமிழ் பேசும் மக்களின் விமோசனப் பாதை, (யாழ்ப்பாணம், 1963) பக். 9

14 இ. த. அ. க. வெள்ளிவிழா மலர் பகுதி 2, பக். 41

15 மேற்படி, பக். 41

16 மேற்படி, பக். 42

17 Jha, C. S., From Bandung to Tushkent glimpses of India's Foreign Policy, (Madras 1983) pp. 276-77

18 Suryanarayan, V., 'Repatriation of Indian Citizens from Sri-Lanka' in Suryanarayan (ed.) Rehabilitation of Sri Lankan Repatriates - A Critical appraisal Centre for South and South East Asian Studies. University of Madras, (Madras, 1986) p. 10

19 இ. த. அ. க. வெள்ளிவிழா மலர், *பகுதி 3, பக். 49*

20 Wilson, A. Jeyaratnam, 'Sri Lanka and its future', 'Sinhalese Versus Tamils in A. Jeyaratnam Wilson and Dennis Dalton (eds) **The States of South Asia – Problems of National Integration** Honolulu, 1982) p. 303–304

21 இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம், *1970*

22 மோகன்ராஜ், க., இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்துவம் *ஈழம் ஆய்வு நிறுவனம், (சென்னை, 1984) பக். 147–65*

23 n. 5 pp. 162–63

24 Silva, K. M. de, Sri Lanka : the Politics of Separation 1972–85: International Centre for Ethnic Studies, (Kandy 1985) Seminar Paper.

25 Jayaraman, A. Caste Continuities in Ceylon, (Bombay, 1975)

26 *ஆசிரியர் கடந்த மூன்றுண்டுகளாகத் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் அவதானித்ததைக் கொண்டு பெறப்பட்ட முடிவு.*

27 *ஆசிரியர் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் சந்தித்த பல மலையக மாணவர்களிடம் நேர்முக விசாரணைகள் மூலம் பெறப்பட்ட தகவல்*

28 *ஆசிரியர் கடந்த மூன்றுண்டுகளாகத் தமிழ் நாட்டில் தங்கியிருந்த போது சந்தித்த புத்திஜீவிகள், பத்திரிகைகள், இலங்கை அரசியல் கட்சி ஏடுகள் மூலமாகப் பெறப்பட்ட கருத்து.*

29 n. 6